சேவை வழங்கல் முறைமைகளை கட்டியெழுப்புதல் போன்ற நடவடிக்கைகளை கொண்டுள்ளது. மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் செயன்முன்னேற்றம் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நலன்புரி நலன்கள் சபை 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட் 20 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்பட்டிருந்ததனால் பணவளிப்பு இணைப்புக் குறிக்காட்டி – 01 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அடையப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட செயற்பாட்டுக் கைநூலின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டி – 02 இன் பிரகாரம் பொருத்தமான தகைமையுடைய பதவியணியுடன் மீளாய்வாண்டின் போது சமூக பதிவேட்டு தகவல் முறைமை மற்றும் சமூக பதிவேட்டு அலகை ஸ்தாபிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி - 02 இன் கீழ் அமுல்படுத்துவதற்கு வேண்டப்பட்டிருந்த நடவடிக்கைகள் சமூக பதிவேட்டு தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனமொன்றை தெரிவுசெய்வதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்தின் தாமதங்கள் காரணமாக அடையப்பட முடியாதிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 778.24 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 05 மில்லியன் ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் 4.41 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம், பணவளிப்பு இணைப்பு செயலாற்றல் பெறுபேறுகளை சரிபார்ப்பதற்காக தகைமைகள் மற்றும் அனுபவங்களுடனான சுயாதீனமான மூன்றாம் தரப்பினர் வேலையிலீடுபடுத்தப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்தார். இதற்கு மேலதிகமாக, செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மூன்றாம் தரப்பினர் மதிப்பீட்டை சேகரித்து சரிபார்த்தல் நோக்கத்திற்காக செயற்திட்ட முகாமைத்துவக் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மேற்படி நோக்கத்திற்காக மூன்றாம் தரப்பு நிறுவனத்தை தெரிவு செய்து நியமிப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.